அ.வ.எண்: 173/2015 நாள்:12.07.2023

பி.வா.சா.1. செல்வம் என்கிற சிங்காரவேலு

1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1) அ.வ.எண்.105/2011 என்ற வழக்கை தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த போது மே.மு. எண்.35/2011 என்ற அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். சித்ரா உடைய சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. அவ்வாறு 1 ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை 1 ஆம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

2) எனது தரப்பில் இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அது வாதிக்கு சாதகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஞாபகம் இல்லை. 28.12.2004 ல் நடைபெற்ற பாகபிரிவினை செல்லாது எனது அறிவிக்க கோரி நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி நாடிமுத்து மீது இருக்கும் தனிபட்ட விரோதத்தினால் நான் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) வாதியும் நானும் சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்ககாக கள்ளகூட்டாக சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்திற்கு 3 ஆம் பிரதிவாதி தான் உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக 2 ஆம் பிரதிவாதியாகிய நான் 1,3 மற்றும் 4 பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் 1 வது பிரதிவாதி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.